IJRAR.ORG E-ISSN: 2348-1269, P-ISSN: 2349-5138

INTERNATIONAL JOURNAL OF RESEARCH AND ANALYTICAL REVIEWS (IJRAR) | IJRAR.ORG
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# பணியர் இன மக்களின் நம்பிக்கை மற்றும் புழங்கு பொருட்கள்

**ச.மிதுன்,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அரசு கலைக் கல்லூரி,
உதகமண்டலம் 643002

## முன்னுரை:

மனித சமுதாயத்தில் பழங்குடிகளுக் கென்று தனி இடம் உள்ளது. தமிழகத்தில் அட்டவணை பழங்குடிகள் 37 இனங்களாக உள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் பண்டைய பழங்குடி மக்களான தோடர் கோத்தர் இருளர் குறும்பர் காட்டுநாயக்கர் பணியர் என ஆறு வகையான பழங்குடியினர் வசித்து வருகின்றனர். அவர்களுள் மிகவும் பின் தங்கிய நிலையில் பணியர் சமுதாய மக்கள் உள்ளனர். இவர்களின் நம்பிக்கை மற்றும் புழங்கு பொருட்கள் ஆகியவை இக்கட்டுரையில் ஆராயப் பெறுகிறது.

## பணியர்:

பணியர் பெயர் விளக்கம் பணியர் என்பதற்கு ‘வேலைக்காரர்’ என்று பொருள். இவர்கள் மவுண்டாடன் செட்டி மற்றும் வயநாடு செட்டி மக்களிடம் அடிமைத்தனமாக வேலை செய்து வந்தனர். அதன் காரணமாக பணியர் என்ற பெயர் வந்தது. பணியர்கள் நாள்தோறும் மற்றவர்களுக்கு வேலை செய்யும் தொழில் ஈடுபட்டு வந்ததால் பணியர் என்று பெயர் வந்தது. பணியர்களை பொதுவாக பணியன், பணியாஸ், பணியமார் என்று உள்ளூர் மக்கள் அழைக்கின்றனர். **“தென்னிந்திய பழங்குடிகளிலேயே அடிமை முறைக்கு ஆளான பழங்குடி ஒன்று உண்டென்றால் அது பணியர் சமூகமாகத்தான் இருக்க முடியும்”1.**

## கனவு பற்றிய நம்பிக்கை:

பொதுவாக எல்லா மக்களிடம் காணப்படும் நம்பிக்கை கனவு பற்றிய நம்பிக்கை ஆகும். உள் மனதில் நிறைவேறாத ஆசைகள் அல்லது எதைப் பற்றி அதிகம் சிந்திக்கிறார்களோ அதுவே கனவாக வெளிப்படும் என்று கூறப்படுகிறது. பணிய மக்களும் ஒரு சில கனவுகளை நல்லது, ஒரு சில கனவுகளை தீயது என்றும் கூறுகிறார்கள்.

**பாம்பு:**

பாம்பு கனவில் வந்தால் நல்லது என்கிறார்கள். கடவுள் தான் பாம்புத் தோற்றத்தில் வந்தது என நம்புகிறார்கள். பாம்பு கனவில் வந்து, கடித்தால் நல்லது என்றும், கடிக்காமல் சென்றால் ஏதாவது தீயது நடக்கப் போகிறது என்றும் நம்புகின்றனர். பாம்பு கால்களை சுற்றிக் கொண்டு, தன்னை விழுங்குவது போல கனவு கண்டால் தெய்வத்தின் அருள் உள்ளது என்று நம்புகின்றனர்.

**யானை:**

யானை கனவில் வந்தால் விநாயகர் பெருமான் கனவில் வந்ததாக நம்புகிறார்கள். யானை கனவில் வந்தால் நல்லது மட்டுமே நடக்கும் என்று நம்பிக்கை கொண்டுள்ளனர்.

**மீன்:**

மீனை கனவில் கண்டால் கெட்டது என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். மீன்களை கூட்டமாக கனவில் பார்ப்பது நல்லது அல்ல. ஏனெனில் அப்படி கனவு கண்டால் குடும்பத்தினருக்கோ அல்லது கனவு கண்டவருக்கோ ஆபத்து வரும் என்று நம்புகின்றனர்.

**காளான்:**

காளானை கனவில் பார்ப்பது ஆபத்து என்று நம்புகிறார்கள். காளானை கண்டால் தெய்வ குற்றம் என்பது அவர்களது நம்பிக்கை ஆகும்.

**நெருப்பு:**

நெருப்பு பிடிப்பது போன்று கனவு கண்டால் தீய சகுனம் ஆகும். அதனால் ஏதாவது ஆபத்து வரும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். இவ்வாறு அவர்களின் கனவு தொடர்பான நம்பிக்கைகள் பல உள்ளன.

**நேரம் கெட்ட நேரம்:**

பணியர் இன மக்கள் தீய சக்திகளை பெரும்பாலும் நம்புகின்றனர். இவர்கள் மாலை 6 மணி நண்பகல் 12 மணி ஆகிய நேரங்களில் வெளியே தனியாக செல்லக் கூடாது என்று நம்புகின்றனர். ஏனெனில் நமக்கு ஏதேனும் கெட்டது நடந்து விடும் என்று இவர்கள் நம்புகின்றனர். பேய் தொடர்பான நம்பிக்கைகளும் இவர்களுக்கு அதிகம் உண்டு. நடு இரவில் பேய்கள் நடமாட்டம் இருக்கும். அதனால் வீட்டை விட்டு இரவு நேரங்களில் வெளியே வர இவர்கள் தயங்குகிறார்கள். இரவு நேரத்தில் யாரையாவது அழைக்க வேண்டும் எனில் மூன்று முறை அவர்களது பெயர் சொல்லி அழைக்க வேண்டும். இல்லையெனில் தீய சக்திகள் தங்களை தாக்கும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர்.

**இறப்பு தொடர்பான நம்பிக்கை:**

பணியர்கள் அவர்களின் மூதாதையர்கள் ஆவிகளாக தங்களை வழிநடத்துகிறார்கள் என்று நம்புகின்றார்கள். அவர்கள் தங்கள் மூதாதையர்களை கடவுளாக வணங்குகிறார்கள். காகம் வீட்டின் முன் கரைந்தால் அதை மூதாதையர்களின் ஆவி என்று குறிப்பிடுகிறார்கள். குயில் கூவுவதை கேட்டால் இவர்கள் அதை தீய சகுனம் என்கிறார்கள். அந்த சத்தம் வரும் திசை அல்லது அந்த சத்தத்தால் யாராவது வீட்டில் இறப்பு ஏற்படும் என்பது இவர்களின் நம்பிக்கை. நாய் ஊளையிட்டால் வீட்டிற்கு ஆகாது என்று நம்புகின்றனர்.

கருத்தரிக்கும் பெண்ணிற்கு ஐந்து மாதம் முடிவில் பேய் ஓட்டுகிறார் ஆட்டாளி. இரவு முழுவதும் பாடல்களை பாடி காலையில் அந்த பெண்ணிற்கு பேய் ஓட்டுகிறார் இதற்கு வாராட்டு பாட்டு என்று பெயர். இதனால் அந்த பெண்ணிற்கு சுகப்பிரசவம் ஏற்படும். பிறக்கும் குழந்தை ஆரோக்கியத்துடன் பிறக்கும் என்று நம்புகிறார்கள். ஆட்டாளி பாடல் பாடும் போது அந்த குழந்தை எவ்வாறு பிறக்கும், எந்த குழந்தை பிறக்கும் என்பதை பற்றி பாடுவார். அவர் சொல்வது அப்படியே நடக்கும் என்று இவர்கள் நம்புகிறார்கள்.

"பணியர்கள் எப்போதாவது பய உணர்ச்சி ஏற்பட்டு ஓடும் போது இப்பி ஒப்பி என்று கத்திக் கொண்டே ஓடுவார்கள் அவர்கள் இப்பிலாவில் வாழ்ந்தவர்கள் என்பது அறியாமலேயே அவ்வாறு கத்திக் கொண்டு ஓடுவார்கள் என்று நாயர், ஜமீன்தார்கள் கூறுகின்றனர் என்பர்"2.

**வீடு சார்ந்த புழங்கு பொருட்கள்:**

**மாணி (துடைப்பம்) :**

வீட்டையும் வீட்டை சுற்றியுள்ள பகுதிகளையும் சுத்தம் செய்வதற்காக துடைப்பம் பயன்படுத்தப்படுகிறது அத்தகைய துடைப்பத்தினை பணியர்கள் தங்கள் மொழியில் மாணி என்று அழைக்கின்றனர் அதனை செய்வதற்காக குறுந்தொட்டி இலைகளை பயன்படுத்துகின்றனர். ஒரு அங்குலம் அளவு அடக்கத்தில் செய்யப்படும் இத்துடைப்பம் சடங்குகளில் கூட பயன்படுகிறது.

**இலக்கிண்ட பலகை (முக்காலி) :**

வீட்டு வேலைகளை செய்ய ஏதுவாக அமர்வதற்கு முக்காலி பயன்படுத்தப்படுகிறது. அத்தகைய முக்காலியை பணியர்கள் தங்கள் மொழியில் இலக்கிண்ட பலகை என்றழைக்கின்றனர். மரத்தினை சிறு சிறு பாகங்களாக வெட்டி செவ்வக அமைப்பில் முக்காலி செய்யப்படுகிறது. அது சிறிய பொருட்கள் வைப்பதற்கும் கூட பயன்படுத்தப்படுகிறது.

**கையிலு (அகப்பை) :**

சமைத்த உணவினை எடுப்பதற்காக அகப்பையை பயன்படுத்துகின்றனர். சோறு சமைக்கவும், கூழ் காய்ச்சவும், குழம்பு ஊற்றவும், பானையிலிருந்து உணவுப் பொருட்களை எடுப்பதற்கும் அகப்பையானது பயன்படுகிறது. தேங்காய் மூடியில் அடி நீளம் உள்ள மூங்கில் குச்சியை கொண்டு செய்யப்படும் இந்த அகப்பையை பணியர்கள் தங்கள் மொழியில் கயிலு என்று அழைக்கின்றனர்

**கோலம்பி (மூங்கில் தட்டு) :**

உணவு உண்பதற்கு தட்டு பயன்படுகிறது. ஒரு அடி நீளமும் அரை அடி அகலமும் கொண்ட தட்டின் வடிவம் பலகை போன்ற அமைப்பில் இருக்கும். இரு பகுதிகளாக உள்ள மூங்கிலின் ஒரு பகுதியை உடைத்து எடுக்கும் பொழுது அது உணவு உண்ணும் தட்டாக பயன்படுத் தப்படுகிறது. குழி போன்ற அமைப்பினை கொண்ட தட்டானது கூழ் கஞ்சி நீர் குடிக்க பயன்படுகிறது. பணியர்கள் தங்கள் மொழியில் தட்டினை கோலம்பி என்கின்றனர்.

**நிறைவுரை:**

பணியர் இன மக்கள் இன்று வரை தங்கள் நம்பிக்கைகளை மாறாமல் வாழ்ந்து வருகின்றனர். தற்கால மக்களுடன் எவ்வித தொடர்புமின்றி வாழ்ந்து வருகின்றனர்.

**துணை நூல் பட்டியல்**

1. பக்தவச்சல பாரதி 2017 தமிழக பழங்குடிகள் ப 68 அடையாளம்

பதிப்பகம் புத்தாநத்தம் 621310.

2. தென்னிந்திய குலங்களும் குடிகளும் தொகுதி-6 ப-59 தமிழ்

பல்கலை கழகம் தஞ்சாவூர்-10.

**தகவலாளர் பட்டியல்**

| வ எண் | பெயர் | வயது | பாலினம் | வேலை | இடம் | ஊராட்சி | மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கயமதாஸ் | 43 | ஆண் | கூலி | அத்திசால் | சேரங்கோடு | நீலகிரி |
| 2 | உதயா | 38 | பெண் | - | பி.ஆர் எப். காலனி | சேரங்கோடு | நீலகிரி |
| 3 | வெளுத்தா | 85 | ஆண் | - | பி.ஆர் எப். காலனி | சேரங்கோடு | நீலகிரி |